**<u>கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்</u>**

**அசல் வழக்கு எண். 174/2019**

**வா.சா.1 – சுப்பிரமணியம்**

**<u>03-04-2025 சாட்சி அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. க.ச.எண். 86 காலையில் மொத்த விஸ்தீரணம் என்ன என்றால் மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்று தெரியாது எனக்கு 3 ஏக்கர் பூமி உரிமை உள்ளது. மேற்படி சொத்து எனது குடும்பத்தின் பூர்வீக சொத்து இல்லை என்றால் சரிதான். அதனை எனது தாயார் கிரையம் பெற்றுள்ளார் எந்த வருடம் கிரையம் பெற்றார் என்று ஞாபகம் இல்லை. கிரைய பத்திரத்தை படித்துப் பார்த்தேனா என்றால் எனக்கு படிப்பு அளவுக்கு பத்தாது. படிக்க சொல்லி கேட்டேன் என்றால் கேட்டேன் ஆனால் ஞாபகம் இல்லை. 1980 ஆம் வருடம் பத்திரப்படி யார் யார் பாகம் பிரித்துக் கொண்டார்கள் என்றால் ஞாபகம் இல்லை. அந்த பத்திரத்தை படித்துக் காண்பித்தார்களா என்றால் படித்துக் காண்பித்தார்கள் ஞாபகம் இல்லை. எனது அம்மா யாருடைய பாகத்தை வாங்கினார்கள் என்றால் பெயர் தெரியாது.

2. தெய்வசிகாமணி, கே.சுப்பிரமணியம் ஆகியோர்களுக்கு எப்படி சொத்தில் பாகம் வந்தது என்றால் அவர்களது பெற்றோர்கள் வாங்கியதில் அவர்கள் பாகம் பிரித்துக் கொண்டார்கள். அந்த பத்திரத்தை நான் பார்த்ததில்லை. 1980ல் யார் யார் பாகம் பிரித்துக் கொண்டார்கள் என்ற விபரமும் அதில் யார் யாருக்கு எவ்வளவு பாகம் வந்தது என்ற விபரமும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். மின் இணைப்பு விண்ணப்பம் எப்போது கொடுக்கப்பட்டது என்றால் எனது தாயார் கொடுத்தார் எப்போது என்று ஞாபகம்

இல்லை. எனது தாயார் எப்போது கிரையம் பெற்றார் என்றால் ஞாபகம் இல்லை. எனது தாயார் கிரையம் பெறுவதற்கு முன்பு இந்த சொத்தில் எனக்கு உரிமை இல்லை என்றால் சரிதான். 146 மின் இணைப்பு இலவசம் மின்சாரம்.

3. பாலசுப்பிரமணியத்தின் தகப்பனார் பொன்னுசாமி கவுண்டர் எப்போது சொத்தை கிரையம் பெற்றார் என்ற விபரம் எனக்கு தெரியாது. 1977 ஆம் ஆண்டு சொத்து பாலசுப்ரமணியத்தின் தகப்பனார் கிரையம் செய்யப்பட்டது என்றால் தெரியாது. 1977 ஆம் ஆண்டு சொத்தை கிரையம் பெற்றவுடன் மின்சார இணைப்பு கேட்டு தனியாக பொன்னுசாமி விண்ணப்பம் கொடுத்தார் என்றால் மூன்று பேர் சேர்ந்து தான் விண்ணப்பம் கொடுத்தார்கள். அந்த விண்ணப்பத்தை நான் பார்த்தேனா என்றால் பார்த்ததில்லை. அந்த விண்ணப்பம் எனது அம்மா சொத்து வாங்குவதற்கு முன்பே கொடுக்கப்பட்டு விட்டது என்றால் மூன்று பங்கு காரர்களும் சேர்ந்து தான் கொடுத்தோம். இலவச மின்சாரம் கேட்டு மனு கொடுத்தால் சுமார் 10 வருடம் ஆகும் இணைப்பு கொடுக்க என்றால் ஒரே வருடத்தில் கூட கொடுப்பது உண்டு.

4. எந்த மாதம் வருடம் தேதியில் மின் இணைப்பு கொடுக்கப்பட்டது என்றால் 1988 ஆம் ஆண்டு கொடுக்கப்பட்டது தேதி மாதம் ஞாபகம் இல்லை. சர்வீஸ் யாருக்கு பெயரில் கொடுக்கப்பட்டது என்றால் மூன்று பேரும் சேர்ந்து யாராவது ஒருவரின் பெயரில் தான் சர்வீஸ் இருக்க முடியும் என்று சொன்னதால் பொன்னுசாமி கவுண்டர் பெயரில் கொடுக்கப்பட்டது. நான் சொல்வது தவறு என்றும் மூன்று நபர்கள் சேர்ந்து விண்ணப்பம் செய்து இருந்தால் பொன்னுசாமி கவுண்டர் மற்றும் பாகஸ்தர்கள் என்று போட்டு தான் கொடுத்திருப்பார்கள் என்றால் சரியல்ல, ஒருவர் பெயரில் தான் கொடுப்பார்கள். 1980 பாகக்காரர் பத்திரத்தில் யார் யாருக்கு எவ்வளவு பாகம் ஒதுக்கப்பட்டதோ

அதற்கு தான் அவர்களுக்கு உரிமை உண்டு என்றால் சரிதான். பாகக்காரர் பத்திரத்தில் கிணற்றில் மூன்று பாகஸ்தர்களும் தனித்தனியாகவோ கூட்டாகவோ எலக்ட்ரிக் பம்ப் செட் வைத்துக்கொள்ள ACE பாகஸ்தர்கள் ஒத்துக் கொள்கிறோம் என்று எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

5. அதில் கிழம்புறம் இருந்த பாம்பேரியை C பாகஸ்தரும், மேல் புறத்து பாம்பேறியை வடகோடாக A பாகஸ்தரும், தென்புறமாக E–பாகஸ்தரும் வைத்துக்கொள்ள வேண்டியது என்று எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதுபடி தான் இன்று வரை ஓட்டி வருகிறோம். 86/4 ல் கிணறு உள்ளது என்றால் சரிதான். அந்த கிணற்றுக்கு மின் இணைப்பு எண் 221 வாங்கினோம் என்றால் அது வேறு கிணற்றுக்கு வாங்கப்பட்டது. நான் சொல்வது தவறு என்றும் இதே கிணற்றுக்கு தான் மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வேறு கிணறு உள்ளது எந்த உட்பிரிவு எண் என்றால் 207/3 ல் உள்ளது. அதில் காலை என்னை தவறாக அடித்து விட்டார்கள். சர்வீஸ் எப்போது வாங்கப்பட்டது என்றால் ஐந்து வருடம் இருக்கும். நான் தான் வாங்கினேன் என்றால் ஆமாம். அந்த அலுவலகத்தில் கேட்டால் எனது விண்ணப்பத்தின் நகல் கிடைக்கும் என்றால் சரிதான். அதனை வாங்கி ஒப்படைக்க தயாராக உள்ளேன் என்றால் தயாராக உள்ளேன்.
( மேலும் குறுக்கு விசாரணைக்காக வாய்த்த ஒத்திவைக்கப்படுகிறது)

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

ஒம்/- திருமதி. A.சுபஸ்ரீ,L.L.M.,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருப்பூர்.